**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S.. No. 17 /2022 PW1**

04.02.2026 **வா.சா.1 பழனி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

90 நாட்களுக்கு மீதித் தொகையை கொடுத்து சொத்தை பதிவு செய்து கொள்வதாக பாலசுப்பிரமணியன் மூலம் ஒப்பந்தம் போட்டுக் கொண்டேன். 90 நாட்களுக்குள் நான் பணத்தை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. 90 நாட்களுக்குள் நான் நடவடிக்கை எடுக்கவில்லை, அவர் சொத்தை பதிவு செய்ய முன்வராத காரணத்திற்காக அவர் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை, ஆனால் ஊர் பெரியவர்களை வைத்து பஞ்சாயத்து செய்தேன். மேல்சோழங்குப்பம் முன்னாள் தலைவரை வைத்து அவ்வாறு பஞ்சாயத்து பேசினேன். நான் 90 நாட்களுக்குள் பணம் தயார் செய்ததாக சொல்வதும், ஊர் பெரியவர்கள் மூலம் பஞ்சாயத்து செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. 3 ஆண்டுகளுக்குள் பணத்தை நீதிமன்றத்தில் செலுத்தி சொத்தை என் பெயருக்கு கிரையம் செய்து கொள்ள சட்டப்படி வழிஉள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். 3 ஆண்டு கெடுவுக்குள் நான் கிரையம் செய்து கொள்ள வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. நான் 9 ஆண்டுகாலம் சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி 3 ஆண்டு கால கெடுவுக்குள் நான் பணத்தை தயார் நிலையில் வைத்திருந்தேன் என்பதை நிருபிக்க நான் ஆவணம் ஏதும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் என்னுடன் வந்தவர்கள் மூலம் நிருபிக்க முடியும். நான் 1 செண்டிற்கு எவ்வளவு பேசினேன் என்றால் ரூ. 7990/-. நான் விலைத் தொகையை குறைக்கச் சொல்லி கேட்டு பஞ்சாயத்து பேசினேன் என்றால் இல்லை. பாலசுப்பிரமணி நான் கேட்டுக் கொண்டபடி பணத்தை குறைக்க நான் முன்வராததால் தான் நான் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்வரவில்லை என்றால் சரியல்ல. ரூ.46,92,000/- மீதித் கிரையத் தொகையான பணத்தை எடுத்துச் சென்றதாக சாட்சி தன்னுடைய செல்போனில் கணக்கு போட்டு பார்த்து சாட்சியம் அளிக்கிறார். எந்த வங்கியில் இருந்து மேற்படி தொகையை நான் எடுத்தேன் என்றால் எனக்கு தற்போது நியாபகம் இல்லை. நான் மேற்கண்டவாறு தொகையை எடுத்துக் கொண்டு பாலசுப்பிரமணியத்தை அனுகியதாக சொல்வதே பொய் என்றால் சரியல்ல. மேற்படி தொகை என்னிடம் இருந்தும், ஏன் அந்த தொகையை வங்கியில் வைப்பீடு செய்து விட்டு பாலசுப்பிரமணியத்திடம் சென்று

கிரையம் செய்து கொள்ள தயாராக இருப்பதாக சொல்லவில்லை என்றால் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. நான் பிரதிவாதியிடம் தவறான லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முன்பணத்தை வட்டியுடன் திருப்பி தரச் சொல்லி மட்டுமே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன், சொத்தை கிரையம் செய்து தரச் சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் கிரையம் செய்ய முன்வராத காரணத்தால் அந்த சொத்தானது தற்போது தரிசு நிலமாக மாறிவிட்டது என்றும், அந்த இழப்பு காரணத்திற்காக பிரதிவாதி எனக்கு எதிராக ரூ. 9,01,000/- கோரி எதிரிடை நிவாரணம் கேட்க உள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் மேற்படி சொத்தில் இருந்த கிணறு பம்பு செட் ஆகியவற்றை இடித்து தரைமட்டமாக ஆக்கிவிட்டு அந்த இடத்தில் விவசாயம் செய்யமுடியாத அளவிற்கு சமன்படுத்தி விட்டேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் பெற முன்வராத காரணத்தாலும், சட்டப்படி நடவடிக்கை எடுக்காத காரணத்தாலும், 1 முதல் 3 பிரதிவாதிகள் அந்த சொத்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி நான் மாசிலாமணி மற்றும் 1, 2 பிரதிவாதிகளுடன் போட்ட கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படாத ஒன்று என்றும், அதனால் தான் மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம் பதிவு அலுவலக வில்லங்கத்தில் வரவில்லை என்றும், அதனால் 4, 5 பிரதிவாதிகள் பெற்ற மேற்படி சொத்தின் கிரையம் ஆனது நல்லெண்ண கிரையதாரர்களால் பெறப்பட்ட கிரையம் என்று சொன்னால் சரியல்ல. நான் போட்ட கிரைய ஒப்பந்த கால கெடு முடிந்து விட்டதால் 1 முதல் 3 பிரதிவாதிகள் 4, 5 பிரதிவாதிகளுக்கு செய்த கிரையம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி பிரதிவாதிகள் எனக்கு சொத்தை கிரையம் செய்து கொடுக்க தயராகத்தான் இருந்தார்கள் என்றும், நான் தான் கிரையம் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த இந்த வழக்கானது உரிய காலகெடுவிற்குள் தாக்கல் செய்யாததால் காலவரையறை சட்டப்படி தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மேற்படி வழக்கானது காலக்கெடு தாண்டி தாக்கல் செய்த காரணத்தினாலும், நான் உரிய கால கெடுவிற்குள் கிரையம் பெற முன்வராத காரணத்தாலும், அதனால் மேற்படி சொத்திற்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிரிடை நிவாரணம் (Counter Claim) வழங்க கடமை பட்டவன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** -

மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை அப்படியே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.